கருத்து விளக்கக் கட்டுரை – ஆண்டு 3

பாடநூல் பக்கம் 137 & நடவடிக்கை நூல் பக்கம் 73

# திறன்பேசியினால் ஏற்படும் நன்மை தீமைகள்

தொடர்புச் சாதனங்களில் ____________ ஒன்று. இஃது அறிவியல் கண்டுபிடிப்பின் அற்புதம். திறன்பேசியைப் பயன்படுத்துவதால் __________ உள்ளன. தீமைகளும் உள்ளன.

திறன்பேசியைப் பயன்படுத்துவதால் நாம் பிறருடன் __________முறையில் தொடர்பு கொள்ளலாம். அதுமட்டும் இல்லாமல், செய்திகள் அனுப்பவும் ____________எடுக்கவும் திறன்பேசியைப் பயன்படுத்தலாம். உதாரணத்திற்குப் புலனம், தொலைவரி, கீச்சகம் மற்றும் படவரி போன்ற செயலிகள் மூலம் உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள திறன்பேசி பெரிதும் துணைபுரிகின்றது. மேலும், திறன்பேசியில் நாம் முக்கியத் தேதி, நாள்களைச் சுலபமாகப் __________ செய்யலாம்.

திறன்பேசியினால் நன்மைகள் ஏற்படுவது போன்றே ___________சேர்ந்தே ஏற்படுகின்றன. திறன்பேசியை அதிகமாகப் பயன்படுத்துவதால் மூளை, காது, கண் ஆகிய உறுப்புகள் ____________. அதோடு, பலர் வாகனம் செலுத்தும்போதும் திறன்பேசியைப் பயன்படுத்துவதால் _________ விபத்துகள் ஏற்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மேலும், சில தரப்பினர் திறன்பேசியைத் தீய வழிகளில் பிறரை ஏமாற்றுவதற்கும், _____________, அவதூறு பரப்புவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

எனவே, நாம் திறன்பேசியின் நன்மைகளை அறிந்து அதனை ____________ பயன்படுத்திப் பயன்பெற வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **திறன்பேசியும்** | **தீமைகளும்** | **முறையாகப்** | **பாதிக்கப்படுகின்றன** | **சுலபமான** |
| **ஒளிப்படங்கள்** | **சாலை** | **நன்மைகளும்** | **மிரட்டுவதற்கும்** | **பதிவு** |

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS